செ.வெ.எண்-51 நாள்-21.07.2018

# அரியலூரில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.43 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் மருத்துவ பிரிவு மற்றும் உபகரணங்கள் தொடக்கம்.

அரியலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் தேசிய சுகாதார குழுமத்தின்கீழ் ரூ.43 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான முதியோர் சிகிச்சைக்கான மருத்துவ பிரிவு, இயன்முறை சிகிச்சை பிரிவு, மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவியினையும் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் குத்துவிளக்கேற்றி, தொடங்கி வைத்து, பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கி மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்தாவது** :-

அரியலூர் மாவட்டத்தின் தலைமை மருத்துவமனையாக உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு அனைத்து வசதிகள் மற்றும் பிரிவுகள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு, வருகிறது.

இம்மருத்துவமனையில் அனைத்து பிரிவுகளும் தொடங்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக இன்று (21.07.2018) முதியோர் சிகிச்சைக்கென தனியாக உள்நோயாளிகள் பிரிவு மற்றும் இயன்முறை சிகிச்சை பிரிவுகள் சுமார் ரூ.23.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தில் 20 தீவிர சிகிச்சை மற்றும் நீண்ட நாள் நோய்வாய்ப்பட்ட முதியோர்களுக்கு படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவிற்க்கென தனியாக ஒரு மருத்துவர், ஒரு இயன்முறை சிகிச்சையாளர், 4 செவிலியர், 4 பல்நோக்கு பணியாளர் நியமிக்கப்படவுள்ளனர்.

மேலும், பெண்களுக்கு மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவிகள் சுமார் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் ஆரம்ப நிலையில் கண்டறிந்து மேல் சிகிச்சையும் இங்கே வழங்கப்படவுள்ளது. எனவே, இமாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் அனைத்து மருத்துவ சிகிச்சைகளும் மேற்கொள்ள அரியலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அணுகி சிகிச்சை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை ஜி.கே.லோகேஷ்வரி, துணை இயக்குநர் பொது சுகாதாரம் ஹேமசந்த்காந்தி, தலைமை மருத்துவர் ரமேஷ், மருத்துவர் முகமது ரியாஸ் மற்றும் அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**